செ.வெ.எண்: 40 நாள்:24.09.2020

பெரம்பலூர் மாவட்டம்

**வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் வேப்பந்தட்டை மற்றும் அனுக்கூர் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் இன்று (24.09.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவிக்கையில்:

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை துறையின் சார்பில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1465 ஹெக்டர் நிலப்பரப்பில் 1473 விவசாயிகளுக்கு ரூ.985 இலட்சம் மதிப்பீட்டில் மழைத்தூவான் அமைத்திட மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத்துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம், பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், கூட்டுப்பண்ணையத் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையின் மூலம் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம், 12.5 ஏக்கருக்கு கீழ் உள்ள விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 714 ஹெக்டர் நிலப்பரப்பில் ரூ.495 இலட்சம் மதிப்பீட்டில் 100 விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்திட மானியம் வழங்கப்பட்டுள்ளது. மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2.5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு 100 சதவீத மானியத்தில் தேனீ வளர்ப்பதற்கு ரூ.12,800 நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 100 நபர்களுக்கு ரூ.12,80,000 மதிப்பீட்டில் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வேப்பந்தட்டை ஊராட்சியில் வேளாண்துறையின் சார்பில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 1 ஹெக்டர் நிலப்பரப்பில் மழைத்தூவான் அமைத்திட ரூ.36,176 மானியமும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் அனுக்கூர் ஊராட்சியில் ரூ.1,13,133 மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கான மானியமும், 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் தேனீ வளர்ப்பதற்காக 8 பெட்டிகள் அமைத்திட ரூ.12,800 மானியமும் வழங்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

மேலும் அரசு செயல்படுத்தி வரும் வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறையின் பயன்கள் முறையாகவும், சீராகவும் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைத்திட துறை அலுவலர்கள் நல்ல முறையில் பணியாற்றிட அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்கள். விவசாயிகள் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை அறிந்து அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இணை இயக்குநர் (வேளாண்மை துறை) கருணாநிதி, துணை இயக்குநர் (வேளாண்மை துறை) கீதா, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) பாத்திமா, உதவி இயக்குநர் செல்வபிரியா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.